Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி இலக்கம் 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி புரட்டாதி 24 ஆம் நாள் ஜமாதுல் ஆகிர் பிறை 3 (10-10-64) சனிக்கிழமை இதழ் 241

தீபாவளித் திருநாளை சிறப்புடன் கொண்டாட

வளர்மதி

ரெக்ஸ்ரைல்ஸ ஸதாபனத்தாரின்

மலிவு விற்பனையை

ஞாபகப்படுத்துகிறோம்.

176, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்
போன்: 557

# நகல் மசோதாவுடன் கெய்ரோவுக்கு தூது

## பிரதமரின் அங்கீகாரம் பெற செனட்டர் பயணம்

கொழும்பு, வெள்ளி

ஏரிக்கரைப் பத்திரிகைகளை எடுத்து கூட்டுஸ்தாபனம் ஒன்றின்கீழ் விடுவதற்கென மந்திரிசபையின் அவசரக் கூட்டத்தில் தயாரித்த நகல் மசோதாவை கெய்ரோவிலிருக்கும் பிரதமர் சிறிமாவிடம் காட்டி அங்கீகாரம் பெறும்பொருட்டு செனட்டர் ஐ. கரணகொட நேற்றிரவு கெய்ரோவுக்கு விமானத்தில் பயணமானர்.

மந்திரிசபையின் தீர்மானத்துக்கிணங்க செனட்டர் கரணகொட கெய்ரோ சென்ற விஷயம் இன்று காலைவரை இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

பத்திரிகை மசோதாவின் கதிபற்றியும் சபாநாயகரின் தீர்ப்புப் பற்றியும் பிரதமரின் சகோதரரும் பதில் உணவு மந்திரியுமான கிளிபோர்ட் ரதவத்தையும்அரசாங்கத் தலைவர் திரு சி. பி. டி. சில்வாவும் பிரதமருக்கு டெலிபோனில் தெரிவித்தனர்.

கெய்ரோ சென்றுள்ள செனட்டர் கரணகொட திங்கட்கிழமை கொழும்பு திரும்புவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏரிக்கரைப் பத்திரிகைகளை எடுப்பதற்கான நகல் மசோதாவை டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தான் தயாரித்தாரென்றும் டாக்டர் என். எம்பெரேராவின் யோசனையின் மீது டாக்டர் கொல்வின் மந்திரிசபைக்கூட்டத்தில் கலந்து கொண்டாரென்றும் தெரிகிறது.

## கைத்தொழில் சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட கைத்தொழில் சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு:
20 R 0220 ரூபா 51,975

இரண்டாவது பரிசு:
05 M 0867 ரூபா 14,850

மூன்றாவது பரிசு:
01 B 0706 ரூபா 7,425

(6-ம் பக்கம் பார்க்க)

## இன்று

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி நவராத்திரி பூசைவிழாவில் இராமநாதன் இசைக்கல்லூரி மாணவிகள் கலந்துகொண்டு இசை விருந்தளிப்பார்கள்.

செனட்டரின்

## கெய்ரோ விஜயத்துக்கு காரணம் கூற சபை முதல்வர் மறுப்பு

கொழும்பு, வெள்ளி

செனட்டர் கரணகொட அரசாங்க அலுவல் சம்பந்தமாகவே கெய்ரோ சென்றுள்ளதாக கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கையில் சபை முதல்வர் திரு. சி. பி. டி. சில்வா தெரிவித்தார். எனினும் செனட்டர் கரணகொட எந்த அலுவலுக்காக கெய்ரோ சென்றுள்ளார் என்பது பற்றிக் கூற அவர் மறுத்துவிட்டார்.

பத்திரிகைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதற்காக இன்னொரு பத்திரிகை மசோதா சபையில் சமர்ப்பிக்கப்படுமா என்ற அங்கத்தவர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் அதற்கென புறம்பான ஒரு முறை ஒன்று இருப்பதாகவும் தக்க தருணத்தில் அதுபற்றித் தெரிவிக்கப்படும் எனவும்சபை முதல்வர் தெரிவித்தார். அப்படியான மசோதா ஒன்று இருப்பின் அது மிக விரைவில் சமர்ப்பிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

திரு. கரணகொட கெய்ரோ சென்றுள்ளார் என்பது உண்மைதானா என்றும் யாருடைய செலவில் அவர் அங்கு சென்றுள்ளார் எனவும் ஒத்திவைப்பு நேரத்தின்போது திரு. ராஜரத்தின கேட்டார். பத்திரிகைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்வது சுதந்திரக் கட்சியின் கொள்கையல்லவென்றும் அது சமசமாஜக் கட்சியின கொள்கையெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

"கொல்வின் ஆர். டி. சில்வா மந்திரிசபைக் கூட்டத்தில் கலந்துகொண்டார். அவ்விதமாயின் சுதந்திரக்கட்சி அங்கத்தவர்களின் புத்திசாலித்தனம் எங்கே போய்விட்டது? கரணகொட ஏன் கெய்ரோ போகிறார் என்பதை இச்சபை அறியவேண்டும். இதன் பின்னல் என்ன இரகசியம் இருக்கிறது? முன்னர் நீர் ஒரு ஜனநாயகவாதியாக இருந்தீர். இப்பொழுது ஏகாதிபத்தியவாதியாக மாறி வருகிறீர்" என சபைத்தலைவரைப் பார்த்து திரு. ராஜரத்தின கேட்டார்.

பருத்தித்துறை

## பஸ் ஊழியர் வேலை நிறுத்தம்

உடுப்பிட்டி, வெள்ளி

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த தொழிலாளர்கள் இன்று காலை தொடக்கம் வேலைநிறுத்தம் செய்கின்றனர்.

நேற்றிரவு டிப்போவில் பஸ் ஒன்றினுள் நித்திரைசெய்து கொண்டிருந்த பஸ் சாரதி ஒருவர் பருத்தித்துறை பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த சில பொலிஸாரால் தாக்கப்பட்டதாகவும் இதுவே தான் வேலைநிறுத்தத்துக்குக் காரணமென்றும் கூறப்படுகின்றது.

## கொழும்பில் மழையோடு கூடிய பெரும் புயல்

கொழும்பு, வெள்ளி

நேற்று நள்ளிரவு கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் பலத்த மழையுடன் கூடிய புயல் வீசியது. மணிக்கு 45 மைல் வேகத்தில் வீசிய இந்தப் புயலால் மரங்கள் பல வேரோடு பிடுங்கப்பட்டதுடன் தொலைபேசித் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன.

நேற்று நள்ளிரவு 11-30 மணி முதல் 12-30 மணிவரையான ஒரு மணித்தியாலத்தில் 5 2 அங்குல மழை பெய்தது. சென்ற இரவு முழுவதும் 7 2 அங்குல மழை பெய்ததாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்த அதிவேக புயலால் கடலில் நங்கூரம் பாய்ச்சப் பட்டிருந்த கப்பல்கள் பல கயிற்றை அறுத்தெறிந்து கொண்டு பல திக்குகளும் அள்ளுப்பட்டுச் சென்றன. ஆனால் தக்க சமயத்தில் விபத்து எதுவும் ஏற்படாதவண்ணம் பார்த்துக்கொள்ளப்பட்டது. பெரிய எண்ணெய்த்தாங்கி ஒன்று நள்ளிரவு புயல்வேகத்தினால் அள்ளப்பட்டு கரை சேர்ந்த போது அதில் ஒரு மீனவரின் சடலம் காணப்பட்டது. வேறு இரு சடலங்களும் கிழக்குக் கரையில் கண்டுபிடிக்கப்பட்டது.

சிங்களம் தெரியாது

## மாநகரசபை ஊழியர்களுக்கு சம்பளஉயர்வு அளிக்கப்படும்

### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம் நிறைவேறியது

யாழ்ப்பாணம், சனி

சிங்களம் தெரியாதென்ற காரணத்தால் மாநகரசபையில் வேலைசெய்யும் ஊழியர்களின் சம்பள ஏற்றத்தைத் தடுக்கக் கூடாதென்று நேற்று மாலை நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தில் திரு பீற்றர் சோமசுந்தரம் கொண்டுவந்த தீர்மானம் திரு. கே. வி. தெய்வேந்திரத்தினால் ஆமோதிக்கப்பட்டு சபையில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. மேற்படி கூட்டம் மேயர் திரு எஸ். வி. மகாதேவா தலைமையில் நடைபெற்றது.

1965-ம் ஆண்டிற்கு யாழ்ப்பாண மாநகரசபைப் பகுதியில் குழாய் மூலம் தண்ணீர் விநியோகிக்கப்படும் பகுதிகளுக்கு சோலைவரி விகிதமாக 17 வீதம் அறவிடுவதென்றும், குழாய்த் தண்ணீர் உபயோகத்தைப் பெருத மற்றைய பகுதிகளில் சோலைவரி விகிதமாக 15 வீதம் அறவிடுவதென்றும் நிதிக்குழு செய்த தீர்மானம் பற்றி சபையில் ஆலோசிக்கப் பட்டது.

மேற்படி நிதிக் குழுவின் தீர்மானம் அடுத்த கூட்டத்திற்கு ஒத்திவைக்கப் பட்டது.

மின்சார விநியோக வேலையை ஒப்பந்தம் மூலமே செய்தென்று 29-9-64 சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ரத்துச் செய்யவேண்டுமென்று திரு. நா. த. செல்லத்துரை சபையில் கொண்டு வந்த ஒரு தீர்மானத்துக்கு திரு. எஸ். நாகராசா ஒழுங்கு பிரச்னை ஒன்றைக் கொண்டு வந்தார்.

"சபையில் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதானால் நான்கு நாள் முன்னதாகவே சபைக்கு அறிவிக்கப்படவேண்டும். அப்படி எதுவித அறிவிப்புமில்லாமல் இத் தீர்மானம் கொண்டு வருவதால் சபையில் இத் தீர்மானத்துக்கு இடமளிக்க கூடாது" என்று திரு. எஸ். நாகராசா கொண்டுவந்த தீர்மானத்தை திரு. ஏ. ஜி. ராஜசூரியர் அனுமதித்தார்.

மேற்படி ஒழுங்குப் பிரச்னை சம்பந்தமாக மேயர் பதிலளிக்கையில், மாநகரசபைச் சட்ட

(6-ம் பக்கம் பார்க்க)

## இன்று தமிழ் இலக்கிய விழா

யாழ்ப்பாணம், சனி

வலிகாமம் மேற்கு உள்ளூராட்சி மன்றங்கள் நடத்தும் தமிழ் இலக்கிய விழா இன்று மாலை 5 மணிக்கு மானிப்பாய் பட்டினசபை முன்றலிலுள்ள திறந்தவெளி அரங்கில் நடைபெறும். (4-ம்பக்கம் பார்க்க)

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

மாணவர்க்கு

அதிகாலை 4 மணிக்கு எழுந்திரு. ஒவ்வொரு நாளும் பாடங்களை நன்கு படி. ஆசிரியர், பெற்ளேர், பெரியோர் இவர்களுக்கு மரியாதை செய். புகைத்தல் முதலிய கெட்டபழக்கங்களை விடு. பிரம்மச்சரியத்தின்மூலம் உலகத்தையே வெல்லலாம்.

— மாணவர்களுக்கு சுவாமி சிவானந்தர் உபதேசம்.


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna
Telegrams. EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு புரட்டாதி 24உ. (10-10-64)


## சபாநாயகர் தீர்ப்பு

பத்திரிகை மசோதா இம்மாதம் 18-ம் திகதி பார்லிமெண்டில் விவாதிக்கப்படமாட்டாது. பார்லிமெண்டில் இருதரப்பினரும் கிளப்பிய சட்டநுணுக்கப் பிரச்னைகளைப் பரிசீலனை செய்து சபாநாயகர் பாரபட்சமின்றி துணிச்சலுடன் அளித்த தீர்ப்பின் முடிவுதான் இது. சபாநாயகரின் தீர்ப்பு எதிர்க்கட்சியினருக்குக் கிடைத்தவெற்றியென்ருே அரசாங்கத்துக்குக் கிடைத்த தோல்வியென்ருே கருதுவதற்கு இடமில்லை.

சென்ற செவ்வாய்க்கிழமை சபாநாயகர் அளித்த தீர்ப்பை மாற்றுவதற்கு அரசாங்கக் கட்சி முயற்சி செய்ததுபோல் சபாநாயகர் நேற்று முன்தினம் அளித்த தீர்ப்பை மாற்ற முயற்சி செய்யமாட்டாதென்றும் சபாநாயகரின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுமென்றும் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மந்திரிசபைக்கூட்டத்தில் செய்யப்பட்ட முடிவுகளிலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. செனட்சபையில் பதின்மூன்று வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட இப்பத்திரிகை மசோதா ஜனப்பிரதிநிதிகள்சபையில் இரண்டு தினங்கள் பெரும் சட்டப்பிரச்னைகளைக் கிளப்புவதற்கு, மசோதாவைச் சபையில் சமர்ப்பிக்க முன்வந்த தொழில் மந்திரி வார்த்தைப் பிரயோகத்தில் விட்ட ஒரு சின்னத் தவறுதான் காரணம், பத்திரிகை மசோதாவை இவ்வளவு அவசர அவசரமாகக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டிய அவசியமென்ன என்பதை அரசாங்கக்கட்சியினர் விளக்கவில்லை.

பத்திரிகைகள் தேசிய நலனுக்கு விரோதமாக நடந்து கொள்கின்றனவெனில் இது ஒரு தேசியப் பிரச்னையாகக் கருதுவதே முறை. பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் நோக்கம் இல்லையென்றும் ஜனநாயகத்துக்கு விரோதமாக நடந்து கொள்ளும் எண்ணம் இல்லையென்றும் பிரதமர் உள்ளிட்டு பொறுப்புள்ள மந்திரிகளும் அடிக்கடி உறுதியளித்து வருகின்றனர். பத்திரிகைச் சுதந்திரம் பறிபோய்விடுமென்றும் ஜனநாயக உரிமைகள் நசுக்கப்பட்டு விடுமென்றுமே பொதுமக்களில் பலரும் எதிர்க்கட்சியினரும் பத்திரிகை மசோதாவை எதிர்க்கின்றனர். இந்நிலையில் பத்திரிகைகள் தேசநலனுக்கு விரோதமாக நடந்து கொள்கின்றனவென்று அரசாங்கம் கருதினால் இதைத் தேசியப் பிரச்னையாகக் கருதி சகல அரசியல்கட்சித் தலைவர்களுடனும் முன்கூட்டி ஆலோசனை செய்து உரிய நடவடிக்கைகளை சாவதானமாக மேற்கொள்வதே விவேகமாகும். இந்திய வம்சாவளியினர் பிரச்னைபற்றி அரசியல் கட்சித் தலைவர்களுடன் பிரதமர் ஆலோசனை செய்ய முடியுமெனின் ஜனநாயகத்தின் முக்கிய அம்சமான பத்திரிகைச் சுதந்திரம்பற்றி ஆலோசனை நடத்துவதில் தவறென்ன?

ஆத்திரமும் அவசரமும் மாருன விளைவையே ஏற்படுத்துமென்பதற்கு அரசாங்கத்தின் பதின்மூன்ருவது பத்திரிகை மசோதாவுக்கு இன்று நேர்ந்துள்ள கதி போதிய சான்ருகும். அரசாங்கம் இனியாவது நிதானமாகச் சிந்தித்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில் இதர அரசியல் கட்சிகளின் ஆலோசனையையும் ஒத்துழைப்பையும் பெற முயலவேண்டும். இந்த ஒத்துழைப்பை எவ்வளவுதூரம் பெறமுடிகிறதோ அதில்தான் ஜனநாயக வெற்றியும் தங்கியுள்ளது.

# சக்தியைவழிபட்டுசகலரும்உய்யும் நவராத்திரி தத்துவம்

— இ. நாகராஜன் —

துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் சக்திகளுக்கும் விழாவெடுக்கும் ஒன்பது தினங்களையே நவராத்திரி என்று வழங்குவர். இவ்வொன்பது தினங்களிலும் இல்லங்களைப் புனிதமாக்கி ஆராதனைப் பொருள்கள் கொண்டு பண்டுதொட்டு நம்மவர் சக்தி வழிபாடு செய்து வருகின்றனர்.

வீரம், செல்வம், கல்வி ஆகிய வற்றையருளும் சக்திகளை துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி என்போர். இகத்தில் வளத்தையும், பரத்தில் முத்தியையும் பெறுவதற்குச் சக்தி வழிபாட்டை மேற்கொண்ட அடியார்கள் இஷ்டசித்திகளை பெற்றுய்தனர். என்று புராணங்கள் கூறுகின்றன.

இவ்விழா இயற்கையோடு தொடர்புடையது. பண்பாட்டின் சிறப்பையும் கலைகளின் புனித தத்துவத்தையும் விளக்குவது; எல்லாவற்றிலும் மேலாக ஆண்டவனின் ஆரா அன்பை அடைய வழிசெய்வது; வாழ்வோடொட்டிய வகையில் இறைவனை துதிக்கச் செய்யும் சீர்மையுடையது.

"அம்மையே அப்பா வொப்பிலாமணியே..." என்ற இவ்வமுதவாக்கு முற்றிப் பழுத்த அடியவர் உள்ளத்தினின்றும் கனிந்து—உதிர்ந்தது. இறைவனை அன்னையாக விளித்துப் புகழ்பாடி, அவனையே நோக்கும் தம் செய்கைகள் மூலம் அவன் தாளடைந்த மெய்யடியார்கள் அவர்கள்.

"கன்றினுக்குச் சேதா
கனிந்திரங்கல் போலவெனக்
கென்றிரங்கு வாய்கருணை
எந்தாய் பராபரமே!"

என்கின்ற தாயுமான சுவாமிகளின் அருள்வாக்கில் இறைவனை "எந்தாய்" என்று ஏற்றிப் போற்றுகின்ற இதயஅனுபவம் துலங்குகிறது.

உலகவாழ்வின் இன்பங்களை நீத்து-மெய்யின்பத்தை நாடிச்செல்லும் அடியார்களாலும் நீக்க முடியாத பாசமே தாய்ப்பாசம். இது உயிரோடொன்றிய இணைப்பு என்று, தெய்வ அனுபவத்திலே திளைத்த அடியார்களின் வாக்குக்களும், வாழ்க்கையும் எமக்குக் காட்டுகின்றன. தாய்ப் பற்றைத் துறந்துவிடல் முடியாது—அவளுக்குத் தாம் கடன் செய்ய வேண்டுமென்பதைப் பட்டினத்தடிகள் வாழ்க்கையிற் பார்க்கின்ருேம்.

எனவே இறைவனைத் தம் மன்னையாகப் பாவனை செய்வதிற் பக்தர்களின் இருதயம் ஒன்றிவிடுகிறது.

ஒன்ருய்—பலவாய்—யாவையுமாய் ஆன ஆண்டவனை அன்னையென்று விளிப்பதிலுள்ள கருத்து விசேடமானதே. பெற்றவளுக்கும் பிள்ளைக்குமுரிய தொடர்பு எந்தக் குற்றமும் விரவாத தூய்மையின்பாற்பட்டது. தாயும் சேயும் நெருங்கிப் பழகுவதற்குச் சட்டதிட்டம் ஒன்றுங் கிடையாது சாஸ்திரங்களிற் கூறிய விதிவழியிலேதான் நடக்கவேண்டுமென்று அடியார் கவலைப்படவேண்டியதில்லை. குழந்தை செய்கின்ற எந்தச் செயலையும் தாய் பொருட்படுத்துவதில்லை. காலால் உதைக்கும்போதும் அக் குழந்தையின் காலைக் கண்ணில் ஒற்றி இன்பங் காண்பவள் அன்னை.

தாய் தன் உயிரைப்பற்றிக் கூடப் பொருட்படுத்தாது சேய்க்குச் சேவைசெய்வதிலேயே கண்ணுங்கருத்துங்கொண்டவள். இவ்விதமே இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பு தாய்க்கும் சேய்க்கும் உள்ள இணக்கத்திலும் மேன்மையுடையது. எனவே உலக அன்னைமீது அன்புகொண்டவர்களுக்கு எத்தகைத் துன்பங்களும் நேரிடாதென்பது அடியார்களின் துணிபு.

உலகனைத்தையும் படைத்து உலகத்தின் ஒவ்வோர் அணுவிலும் உறைகுன்ற சக்தியின் பேராற்றலை- ஆழ்ந்த பக்தியின் பேருகப்பெற்ற அனுபவத்தை மெய்யடியார்களின் சரிதங்கள் தெளிவாக விளக்குகின்றன.

இவ்வுயரிய தத்துவத்தின் உட்பொருளாக விளங்குவது நவராத்திரி வழிபாடு. நவராத்திரியைக் கலைத்திருநாள் என்றுங் கூறலாம். சாதாரண கலைத்திருநாளல்ல; அழகை வழுபாடுசெய்து அதன்மூலம் அன்னையின் அருளைப் பெறுகின்ற தாய்மையான கலைநாளிது. வீதியெங்கும் இசையும், எழிலும் முழங்கும் புனித நாள். எத்தொழில் செய்பவரும் அத் தொழிலின் மூலம் அன்னையைப் பூசிக்கும் நாள்.

நவராத்திரியாகிய ஒன்பது தினங்களில் முன் மூன்று நாட்களும் வீரத்துக்குரிய சக்தியான துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்களுஞ் செல்வம் வழங்கும் சக்தியான இலக்குமியையும், இறுதி மூன்று தினங்களுங் கல்வித் தெய்வமான கலைவாணியையும் விசேடமாக வழிபட அமைந்துள்ளன.

ஒன்றே மூன்றுமாகிய சக்தியின் வழபாடு இன்று நேற்று ஆரம்பமானதன்று வேதகாலத்துக்கும் முன்னரே அன்னை பராசக்தியின் வழிபாடு மேலோங்கி நின்றதென்பதற்கு ரிக் வேதம் சான்று பகர்கின்றது" உலகெங்கும் சரித்திரகாலத்வக்கு முன்பே இயற்கைச்சக்திகளின் வழிபாடு நிலவியது. பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்துகிடக்கும் எழில்களின் கூட்டத்திலே எழுகின்ற சக்தியை வழிபட்டு அமைதிகண்டவர்கள் நம் முன்னையோர் இதற்குஞ் சான்றுகளுண்டு. வேதோபநிஷத காலங்களில் தூலசக்திகளைக்காட்டிலும், சூக்குமசக்திகள் முக்கியமானவை என்று கருதப்பட்டன. எனவே ஆதி பராசக்தியே அதி சூக்கும மகாசக்தியாகிய உலகமாதா என்னும் கொள்கை அந்தக்காலத்திலேயே முனிசிரேட்டர்களால் உணரப்பட்டிருந்தது.

சக்தியில் வேரூன்றி வளர்வதே சௌந்தர்யம்; அதாவது, பேரழகு சக்தியின் மூலபலத்திலேதான் வளர்கின்றது. மழை வழமாகப் பெய்த பின் நிலமகள் பசுமையுடன் புதுமைகொண்டு விளங்கும் குறிகள் தோன்றுகின்றன; எட்டுத் திக்கும் எழில் பூத்துக் குலுங்குகிறது. இக்காலத்திலே தான் நவராத்திரி விழா ஆரம்பிக்கின்றது.

நவராத்திரியின் ஒன்பதாம் நாள் ஆயுதபூசை என்பர். விஜயதசமியிலன்று ஏடு தொடங்குதல் முதலான வித்தியாரம்பங்கள் நடைபெறும். இந்தப் பத்துத் தினங்களிலும் வீடுகளில் கொலுவைத்து அழகு சுடர்விடச்செய்து ஏனையோரையும் அழைத்துப் பெரும் கொண்டாட்டங்கள் நிகழ்த்துவர். மாவிலைத் தோரணம் காற்றிலாட, மலர்கள் இன்மணம் பரப்ப, சந்தனமும் குங்குமமும் துலங்க, மங்கல விளக்குகள் ஒளியூட்ட இல்லங்கள் பொலிவுறுகின்றன.

இவ்விழா பல பிரதேசங்களிலும் பலவிதமாகக் கொண்டாடப்படுகிறது. எவ்வளவுதான் கொண்டாட்டங்களில் வேறுபாடிருப்பினும், உட்கருத்தாக மிளிருவது சக்தி பூசை ஒன்றேதான். சக்தியை சாத்வீக முறையில் பூசைசெய்வதுபோல ஏனைய குணங்களிலும் பூசிப்பாருமுண்டு. பலன் கருதாத பூசை புரிவதுபோல் வெற்றி வேண்டும், பொருள் வேண்டும், வேறு விருப்பங்கள் நிறைவேறவேண்டும் எனவும் வழிபடுவாருமுண்டு. இதய சுத்தியோடு எண்ணுவார்க் கெண்ணுவதை ஈவது தானே அன்னையின் கடமை.

தமிழகத்தில் நவராத்திரியின் மிகப் பிரதான அம்சமாக நம்மவர் கொண்டாடுவது கலைமகள்விழா. இதையொட்டி ஆயுதபூசை நிகழக் காண்கின்ருேம். தொழில் முயற்சிகளுக்குக் கலைவாணியின் அருள் இன்றியமையாதது என்ற நம்பிக்கை நம்மவர் மத்தியில் ஆழவேரூன்றி நிலைத்து நிற்கின்றது. "அவளன்றி ஓர் அணுவும் அசையாது" என்ற ஆத்மீகக்கொள்கையின் பிரதிபலிப்பே இது. அல்லலுற்றவர்களை முடிமீது வைத்துக் காக்கின்ருள் அன்புக் கடவுள் என்று கூறுவதுண்டு. அன்னையோ காலைக் கட்டிக்கொண்ட குழந்தையை மடியில் வைத்துக் கொஞ்சுகிருள். தாயின் அரவணைப்பிலே சாந்திகாணுக ஜீவாத்துமாக்களில்லை. அன்னையானவள் அன்பின் வடிவம். அவளின் இதயத்துக்கிலயவாழ்கின்றவர்களுக்கு என்றும் இடும்பையில்லாத இன்பநிலை கிட்டும்.

நவராத்திரி காலங்களிலே மகிஷாசுரன் வதம் நடைபெறுகின்றது. எருமை முகத்தையுடைய அசுரனைத் தேவிசங்காரஞ்செய்து தேவர்களுக்கு ஏற்பட்ட இடரை நீக்கி இன்பநிலை எய்தச் செய்வாளெனப் புராணங்கள் கூறுகின்றன.

மனிதனிடமிருக்கும் தாமச இருக்குணத்தை நீக்கி ஒளியும் சுறுசுறுப்பும் பெறவேண்டுமென்பதே மகிஷாசுர வதத்தில் அடங்கிய கருத்தாகுமெனப் பெரியோர்கள் கூறுகின்றனர், இவ்வுயரிய தத்துவத்தை உணர்த்தும் நவராத்திரியில் சக்தி வழிபாடுசெய்து சைவமக்கள் அன்னையின் அருளைப் பெறல்வேண்டும்.

## ஐயாறன் எழுதுவது

காலையிலே ஓர் அன்பர் சற்று நொண்டியமாதிரி வந்தார். காலில் என்ன என்று கேட்டதும், அது ஒரு பெரிய கதை என்ருர்.

இரண்டு வருடங்களுக்கு முன்பாக, காலில் செருப்புக் கடித்து, வீங்கியதாம். வீக்கம் அதிகரித்து வலி எடுத்தது. பெரிய (ஆங்கில) டாக்டரிடம் காட்ட, மூன்றுமுறை 21 ரூபாய்கள் அழுததில், ஒரு கால் முழுதும் வெட்டிவிடவேண்டுமென்றும் உயிர் பிழைக்கவேண்டுமென்ருல் அப்படிச் செய்வதைத்தவிர வேறு வழியில்லை என்றும். அந்த "நிபுணர்" கூறிவிட்டார்.

காலை இழந்தபின் வாழுவதைவிட செத்தாலும் நல்லதே என்று அவர் ஒரு நாட்டு வைத்தியரிடம் காட்டியதில் அவர் பல தைலங்கள், பத்துகள் போட்டு, மூன்று வாரங்களில் காலை குணப்படுத்திவிட்டதாகவும் கூறி, தம் கால் மட்டுமன்றி வாழ்வே காக்கப்பட்டதாகநன்றியுடன் கூறினுர்.

நாட்டு வைத்தியத்தில் எல்லா நோய்களும் குணமாகிவிடுமென்ருே. "ஆலோபதி" வைத்தியத்திலே எல்லாம் பிழைத்துவிடுமென்ருே கூறுவதற்கில்லை. ஆங்கில வைத்தியத்தில் பலர் குணமாகியுள்ளனர். நாட்டு வைத்தியத்திலே பலர் குணமடையாமலுமிருக்கலாம்; எல்லாம் அவரவர்கள் விதியைப் பொறுத்தது. ஆனுல் ஏதாவது நோய் கண்டதும், அவசரப்பட்டு கையை வெட்டவும், காலை வெட்டவும், பல்லைப் பிடுங்கவும் தேவையில்லை. முன் ஒருமுறை எனக்கு ஐந்து பற்களைப் பிடுங்கிவிடவேண்டுமென்று, ஒரு பெரிய பல் டாக்டர் யோசனை கூறினுர். ஒரு நண்பர் குறுக்கிட்டு, ஏதோ கை மருந்து கொடுத்து மூன்றுநாள் பாவிக்கச் சொன்ஞர். இரண்டே நாட்களில் முற்றிலும் குணமாகிவிட்டது. பற்களைப் பிடுங்கவரவில்லையா என்று அந்த பெரிய டாக்டர் டெலிபோனில் கேட்டதற்கு, பல் குணமாகிவிட்டதென்றும் "தாங்க்ஸ்டன்" கூறினேன், அவர் என்ன நினைத்தாரோ! பேசாமல் டெலிபோனை வைத்துவிட்டார்!

* * *

நாடகத்துக்குள்ளே ஒரு குட்டி வேடிக்கை நாடகம் வருவதுண்டு. அதுபோல கொய்ரோவில் நடக்கும் நடுநிலைமை மகாநாட்டிலே, "ஷோம்பே" யின் குட்டி நாடகமுமுள்ளது.

காங்கோவின் திடீர் பிரதமரான ஷோம்பே, பாஸ்போட் விஸா இல்லாமலே கெய்ரோ மகாநாட்டுக்குப் புறப்பட்டார். அழையா வீட்டிலே நுழைந்த விருந்தாளிபோல், ஷோம்பேயிக்கு அங்கு 'மரியாதை' கிடைத்தது. இரண்டுநாள் பட்டினி கிடந்து, பின்னர் விடுதலை அடைந்த ஷோம்பே, காங்கோவுக்குத் திரும்பியுள்ளாராம். பாவம்!

* * *

இது பெரியதோர் வெட்கக்கேடு. காங்கோ மக்களுக்கு ஏற்கெனவே எவ்வளவோ சோதனைகள். ஷோம்பே ஒரு பெரிய பிரச்னை. இது எப்படித்தான் தீரப்போகிறதோ!

* * *

இங்கு நவராத்திரி பூசை பல கோவில்களிலும் விசேடமாக நடைபெறுகின்றன. நல்லூர் சிவன் கோவிலிலே நடக்கும் பூசை என் மனதுக்கு மிகவும் திருப்தியும், மகிழ்ச்சியுமளித்தது. முடிந்தால் நீங்களும் போய்த் தரிசியுங்கள்.

* * *

பொன்னிலும், மணிகளிலும்-
நறும், பூவிலும் சாந்திலும்
விளக்கிலும், கன்னியர் நகைப்
பிலும் - செழுங் காட்டிலும்
பொழிலிலும் கழனியிலும்
முன்னியதுணிவினிலும் — மன்
னர் முகத்திலும் வாழ்ந்திடும்
திருமகளைப, பண்ணிநற்புகழ்
பாடி-அவள் பாதமலர் வாழ்
த்தி நற்பதம் பெறுவோம்.

—மகாகவி பாரதியார்.

# கெய்ரோவில் சாஸ்திரி சுறுசுறுப்பு

## சீனுவுக்கு பிரதிநிதி கோஷ்டி அனுப்புவது குறித்து பல தலைவர்களுடன் பேச்சு

### இலங்கைப்பிரதமருடனும்'நாடற்றோர்' பிரச்னைபற்றிவிவாதித்தார்

கெய்ரோ, அக். 9

இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர்சாஸ்திரி நேற்று மாலை அல்ஜீரிய அதிபர் பென்பெல்லா, கானு அதிபர் நிக்ருமா, டுனிஸிய அதிபர் போர்கீபா, இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்னே ஆகியோரைத் தனித்தனியே சந்தித்துப் பேசினர். சீனுவை அணுக்குண்டு தயாரிக்க வேண்டாம் என வற்புறுத்த ஐவர் கோஷ்டி ஒன்றை அனுப்ப வேண்டுமென திரு. சாஸ்திரிதெரிவித்த யோசனைகள் இந்தப் பேச்சுகளில் இடம்பெற்றதாகக் கூறப் படுகிறது.

காலையில் திரு. சாஸ்திரி நேபாள மன்னரைச் சந்தித்துப் பேசினர். புதன் கிழமை இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவுடன் அவர்சாதாரண முறையில் பேசினர் என்றும் இலங்கை-இந்தியர் பிரச்னையை விரைவாகவும், இருசாராரின் திருப்திக்கேற்ற முறையிலும் தீர்க்க வேண்டும் என இரு பிரதமர்களும் விருப்பம் தெரிவித்ததாயும் மேலும் அறிவிக்கப்படுகிறது. இப்பேச்சுகளைத் தொடர்ந்து ஸ்ரீமதி பண்டாரநாயக்கா வருகிற 22-ம் திகதி புதுடில்லி சென்று சாஸ்திரியுடன் "நாடற்றோர்" பிரச்னை பற்றி விவாதிப்பார் என அறிவிக்கப்பட்டது. இலங்கைப் பிரதமர் வருகிற 24-ம் திகதி டில்லி போவார் என முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போது இரு தினங்களுக்கு முன்பே அவர் இந்தியா செல்வார்.

இதற்கிடையில் சீனுவுக்கு ஐவர் கொண்ட பிரதிநிதி கோஷ்டி ஒன்றை அனுப்ப வேண்டுமென்ற யோசனையை யூகோஸ்லேவிய அதிபர் டிட்டோ, எதியோப்பிய சக்ரவர்த்தி, உகண்டா பிரமமர் ஆகியோர் வரவேற்றனர்.

திரு. சாஸ்திரி கெய்ரோ மகாநாட்டில் நிகழ்த்திய உரையை உலகத் தலைவர்கள் பலர் பாராட்டியிருக்கிறர்கள். நிதானமும் ஆக்கமும்கொண்ட உரை என கெய்ரோவில் பல தலைவர்கள் அதுபற்றிக் கூறினர். இந்த உரைக்கு, மகாநாடு, பயனுள்ள வடிவம் கொடுக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

நேபாள மன்னர், சிரியாபிரதமர், லைபீரியா அதிபர், கினி அதிபர், தங்கனிகா-ஸான்ஸிபார் உபஅதிபர், லிபியா அதிபர், கம்போடியப் பிரதமர் ஆகியோர் நேற்றைய மண்டலசார்பற்ற மகாநாட்டுக் கூட்டத்தில் உரையாற்றினர்.

நேபாள மன்னர் பேசுகையில் காலஞ்சென்ற திரு.கென்னடி, திரு. நேரு ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தினர். இருவரும் சமாதானப் போராட்டவீரர்கள் என அவர் வருணித்தார். ஓரளவு அணு சோதனைத்தடை ஒப்பந்தத்தில் இன்னும் கையெழுத்திடாத நாடுகள், இனி கையெழுத்திடுவதின்மூலம் உலக பதற்ற நிலையைத் தவிர்க்கலாம் எனவும் அவர் கூறினர்.

சமாதான சகவாழ்வு, எல்லைப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு பலாத்காரத்தை உபயோகிக்காதிருத்தல் ஆகிய இந்திய யோசனைகள்பற்றி நேற்று வெளி விவகார மந்திரிகளின் அவசரக்கூட்டம் ஒன்று விவாதித்தது.

அடுத்து நடைபெறும் ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் உடனிருந்து வழும் கொள்கையை சிபார்சு செய்வதென மகாநாட்டின் அரசியல் கமிட்டி தீர்மானித்தது. இந்தோனேஷியாவின் ஆட்சேபனையையும் பொருட்படுத்தாமல் இந்தியாவின் சகல சிபார்சுகளையும் அரசியல் கமிட்டி ஏற்றது.

ஜனாதிபதி நாஸரின் யோசனைக்கிணங்க தென்னாபிரிக்காவில் 8 தேசியத் தலைவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து மகாநாடு ஒரு தந்தியை அனுப்பியது. இத்தண்டனையை நிறுத்த உதவுமாறு ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்டுக்கும் மற்றோர் தந்தி அனுப்பப்பட்டது.

## கெய்ரோவை விட்டுவெளியேற ஷோம்பேக்கு அனுமதி

### காங்கோவிலிருந்து அல்ஜீரிய, ஐ. அ. குடியரசு தூதர்களும் வெளியேறினர்

கெய்ரோ, அக். 9

திரு. ஷோம்பே, இனி எப்போது வேண்டுமானாலும் கெய்ரோவை விட்டு வெளியேறலாம் என ஐக்கிய அரபுக் குடியரசு அதிகாரிகள் அவரிடம் தெரிவித்திருக்கின்றனர். காங்கோ தலைநகர் லியப்போல்ட்வில்லியிலுள்ள ஐ. அ. குடியரசு, அல்ஜீரிய, அராபிய நாடுகளின் தூதராலய ராஜதந்திரிகள் வெளியேற அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஷோம்பேக்கு இம் முடிவு தெரிவிக்கப்பட்டது.

இன்னும் 24 மணி நேரத்திற்குள் ஷோம்பே தாயகம் திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அவரை ஏற்றிச் செல்ல கெய்ரோ விமானநிலையத்தில் ஒரு விமானம் தயாராக நின்றுகொண்டிருக்கிறது.

லியபோல்ட்வில்லியில் 48 மணிநேரம் காவலில் இருந்தபின் அல்ஜீரிய, ஐ. அ. குடியரசு ராஜதந்திரிகளும், 30 சிப்பந்திகளும் திரு. ஷோம்பேயின் உத்தரவுப்படி பத்திரமாக வெளியேற அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் பிரெஞ்சு, காங்கோ தலைநகர் பிரேஸில்லிக்குச் சென்றனர். புறப்படும்போது, தாங்கள் மீண்டும் லியபோல்ட்வில்லி திரும்பி வரப்போவதாய் ஐ அ. குடியரசுத் தூதர் அறிவித்தார்.

### பிரிட்டிஷ் தேர்தலை...

லண்டன், அக். 9

வருகிற 15-ம் திகதி நடைபெறவிருக்கும் பிரிட்டிஷ் பொதுத்தேர்தலை அவதானிக்கும் பொருட்டு இலங்கை தேர்தல் கமிஷனர் திரு. டயஸ் அமரசிங்கா லண்டன் வந்திருக்கிறார்.

ஒலிம்பிக்கில்

### வடகோரியா சண்டித்தனம்

டோக்கியோ, அக். 9

ஜாகர்த்தாவில் நடைபெற்ற இந்தோனேஷிய 'கனேபோ' விளையாட்டுப்போட்டியில் கலந்துகொண்ட வடகொரியநீச்சல் வீரர்கள் ஒலிம்பிக்கில் தடை செய்யப்பட்டிருப்பதால் 180 பேர்கொண்ட வடகொரிய ஒலிம்பிக் விளையாட்டுக் கோஷ்டி முழுவதையும் வாபஸ் பெறப்போவதாய் அந்த நாடு அறிவித்திருக்கிறது. 48 மணி நேரத்தில் தங்கள் வீரர்கள் மீது விதிக்கப்பட்ட தடைகள் அகற்றப்படாவிட்டால் தாங்களும் வடகொரியாவைப் பின்பற்றப்போவதாய் இந்தோனேஷியாவும் அறிவித்திருக்கிறது.

### பிலிப்பைன்ஸுக்கு சீன அபாயம்

மணிலா, அக் 9

பிலிப்பைன்சுக்கு சீனுவினுல் அபாயம் ஏற்பட்டிருப்பதாக அந்நாட்டு அதிபர் மகபகால் கூறினர்.

### இந்தியாவுக்கு ரஸக் பாராட்டு

வாஷிங்டன், அக். 9

சீனு அணுக்குண்டு தயாரித்துவரும் இச்சமயத்திலும் இந்தியா தன் அணு சக்தியை சமாதான காரியங்களுக்காகவே பயன்படுத்தும் என அறிவித்திருப்பதை அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க் பாராட்டினர். உலக சமாதானத்துக்கு இது பெரும்சேவை ஆற்றியதாகும் எனக் கூறிய திரு. ரஸ்க், சீனுவுக்கு ஐவர் கோஷ்டி ஒன்றை அனுப்ப வேண்டும் என திரு. சாஸ்திரி கெய்ரோவில் கூறிய யோசனையை வெகுவாக வரவேற்ருர்.

### புதிய யு. எஸ். ஸ்தானிகர்

வாஷிங்டன், அக், 9

இலங்கையில் புதிய அமெரிக்க ஸ்தானிகராக திரு. சிஸில் பேர்ட்டன் லியோன் நியமிக்கப்பட்டிருக்கிறர் என அறிவிக்கப்பட்டது.

### 1 வருட அவகாசம்

காட்மாண்டு அக். 9

பர்மாவிலுள்ள தனது பிரஜைகளை மேலும் ஒரு வருடம் அங்கு தங்க அனுமதிக்குமாறு நேபாளம் பர்மாவைக் கேட்டிருக்கிறது.

### 136 பதுக்கல் ஆசாமிகள் கைது

இந்தூர், அக். 9

உணவுப்பொருளை பதுக்கல் செய்த 136 வர்த்தகர்கள் இந்தூரில் கைதுசெய்யப்பட்டார்கள். 10 அரசாங்க மொத்த விற்பனையாளர் லைசென்ஸ்கள் ரத்துச்செய்யப்பட்டு, அவர்களின் வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டன.

## "இந்துசமுத்திர பகுதியை அணுசூனியமாக்க வேண்டும்"

### மண்டலசார்பற்ற உச்சிமகாநாட்டில் ஸ்ரீமதி பண்டாரநாயகா உரை

கெய்ரோ, அக். 9

ஆபிரிக்கா, தென் அட்லாண்டிக், இந்துசமுத்திரம் ஆகிய பகுதிகளை அணுசூன்யப் பிரதேசமாக்கவேண்டுமென்ற தீர்மானத்தை மண்டல சார்பற்ற உச்சி மகாநாடு பேற்கொள்ள வேண்டுமென இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா, நேற்று கெய்ரோ மகாநாட்டில் கேட்டுக்கொண்டார்.

மண்டல சார்பற்ற நாடுகள் தங்கள் துறைமுகங்கள், விமானநிலையங்கள் ஆகியவற்றில் அணு ஆயுதங்களைத் தாங்கிச் செலும், கப்பல்களையும், விமானங்களையும் அனுமதிக்கக்கூடாதெனவும் அவர் கோரினர்.

ஸ்ரீமதி பண்டாரநாயக்கா தன் சொற்பொழிவை நிகழ்த்துவதற்காக மேடைக்குச் சென்றபோது அங்கத்தினர்கள் ஆரவாரமாகக் கரகோஷம் செய்தனர்.

மண்டலசார்பற்ற இந்த மகாநாடு சரித்திரத்தில் முக்கியத்துவம் வகிக்கிறதெனக் கூறினர் இலங்கைப் பிரதமர்

முழு உலகிலும் அணு ஆயுதங்கள் இல்லாமற்செய்ய வேண்டும். இது சாத்தியம் எனவே இலங்கை நம்புகிறது மண்டலசார்பற்ற நாடுகள் கூட்டாகத் தங்கள் துறைமுகங்கள், விமானநிலையங்களில் அணுஆயுதக் கப்பல்கள், விமானங்களைத் தடுப்பதின்மூலம் இந்துசமுத்திரத்தை அணுசூன்யப் பிரதேசமாக்க உதவிசெய்யமுடியுமென்றும் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா குறிப்பிட்டார்.

லாவோஸ், வியட்னும், காங்கோ ஆகிய இடங்களிலிருந்து அந்நியப் படைகள் வாபஸ்பெறவேண்டும் என்று, சைப்பிரஸில் அந்நியத் தலையீடு நிற்கவேண்டும் என்றும் இலங்கைப் பிரதமர் கூறினர்.

ஸ்ரீமதி பண்டாரநாயக்கா காலஞ்சென்ற ஸ்ரீ நேருவுக்கு அஞ்சலிசெலுத்தியபோது சமாதான நாயகராக விளங்கிய மாபெரும் உலகத் தலைவர் மறைந்துவிட்டார் எனக் குறிப்பிட்டார்,

பெரிய வல்லரசுகள் தேவைக்கு மிஞ்சி ஆயுதங்களை வைத்திருப்பதாயும் அவர் கூறினர். தென்னுபிரிக்கா மீது ஒன்றுகூடிய சக்தி வாய்ந்த பொருளாதாரத் தண்டனை அளிக்கவேண்டுமெனவும், தென் ரொடீஷியாவுக்குச் சுயநிர்ணய உரிமை அளிக்கப்பட வேண்டுமெனவும் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா கூறினர்.

ஐ. நா.வில் இலங்கை பெரு நம்பிக்கை வைத்திருக்கிறது. சீனுவுக்கு அதில் இடமளிக்கப்படவேணடுமென்றும் அவர் தெரிவித்தார்.

சீன-பாரத எல்லைப் பிரச்னை பற்றி அவர் பேசுகையில், கொழும்பு யோசனைகளை அவர் குறிப்பிட்டு, இவ்விஷயத்தில் புதிய நடவடிக்கை எதையும் எடுத்துக்கொள்ளப் பக்குவநிலையை இன்னும் அடையவில்லையென்றும், ஆனல் பிரச்னையை அமைதியாகத் தீர்க்க கொழும்பு நாடுகள் தொடர்ந்து நடவடிக்கை எடுக்குமென்றும் கூறினர்.

### உகண்டா தேசிய தினம்

புதுடில்லி, அக். 9

உகண்டா தேசிய தினத்தை முன்னிட்டு ஜனதிபதி ராதாகிருஷ்ணனும், பிரதமர் சாஸ்திரியும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பிருக்கின்றனர்.

### ஜப்பானில்'ஜவஹர்'

டோக்கியோ, அக். 9

காலஞ்சென்ற ஸ்ரீ நேரு பற்றி ஜப்பானில் சேகரிக்கப்பட்ட விபரங்களை, நேற்று ஜப்பானிய அரசாங்கத்தின் சார்பாக இந்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

1957-ம் ஆண்டு திரு. நேரு ஜப்பான் சென்றிருந்தபோது எடுக்கப்பட்ட கலர் சினிமாப் படங்களும், புகைப்படங்களும், ரேப் ரிககார்ட்டுகளும் ஜபபானிய மொழியில் பிரசுரிக்கப்பட்ட நேருவின் புத்தகங்களும் இவற்றில் சிலவாகும்.

கம்போடிய எல்லைச் சம்பவம்

### "தென்வியட்னும் தான் காரணம்"

நாங்பெங், அக். 9

கம்போடியாவில் எல்லை மீறல் சம்பவங்களுக்கு தென் வியட்னும்தான் பொறுப்பு என இந்தோனேஷியாவுக்கான சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷன் தெரிவித்திருக்கிறது.

இக்கமிஷனில் இந்தியா போலந்து, கனடா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. கம்போடிய எல்லைக்குள் தென்வியட்னும் துருப்புகள் புகுந்தன என்றும் கமிஷன் கூறியிருக்கிறது.

கமிஷனின் அறிக்கையை ஐ. நா. பாதுகாப்புச் சபை அதிகாரபூர்வமான தஸ்தாவேஜாக வெளியிட்டிருக்கிறது.

### 20,000—க்கு மேல் வந்தனர்

சென்னை, அக், 9

இதுவரை பர்மாவிலிருந்து 20,000 க்கு மேற்பட்ட பர்மா இந்தியர் நாடு திரும்பியிருக்கிருர்களென்றும், நவம்பர் மாதத்துக்குப்பின்பும் அவர்களை அழைத்துவரக் கப்பல்கள் செல்லுமென்றும் முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் கூறினர். இந்த அகதிகளுக்கு உதவிபுரிய தொழிலதிபர்கள் ஒத்துழைக்கவேண்டும் என முதல்வர் கேட்டுக்கொண்டார்.

### நவராத்திரி விழா

வட்டுக்கோட்டை,வெள்ளி

வட்டு-சிவன் இந்து சமய அபிவிருத்திச்சங்க ஆதரவில் வட்டு வீரபத்திர சிவன் கோயிலில் நவராத்திரி விழா தினமும் ஆறு மணி தொடக்கம் நடைபெற்று வருகிறது. மேற்படி சங்கத்தினர் இவ்விழாவை இம்முறையே தொடககியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. விழாவில் கூட்டுப் பிரார்த்தனை, இசை, விரிவுரைகள், கொலுவைத்தல் முதலியன இடம்பெறுகின்றன. விஜயதசமியன்று இசைக்கலை, நடனக்கலை, பேருரைகள் இடம்பெறவிருக்கின்றன முதல் விழாவை சமாதான நீதவான் அ. க. குமாரசாமி தொடக்கி வைத்தார்.

வலிகாமம் மேற்கு உள்ளுராட்சி மன்றங்கள் நடத்தும் இலக்கிய விழா இன்றும் நாளையும் மானிப்பாய் பட்டின சபை முன்றலிலுள்ள திறந்த வெளியரங்கில் நடைபெறுகிறது.

மாலை 4 மணிக்கு மருதடி விநாயகர் ஆலய முன்றலிலிருந்து இலக்கியச் சுவடிகளின் ஊர்வலம் ஆரம்பமாகி விழா மண்டபத்தை வந்தடையும். 4-45 மணிக்கு இராசவாசல் முதலியார் சி. தியாகராசா கொடியேற்றி வைப்பார். இதன்பின் நாதஸ்வர இசையும் தமிழ் வணக்கமும் இடம்பெறும். சோமசுந்தரப் புலவர் அரங்கில் நடைபெறும் இவ்விழாவில் மானிப்பாய் பட்டின சபைத் தலைவர் திரு. சி. முத்துக்குமாரசாமி 5-05 மணிக்கு வரவேற்புரை நிகழ்த்துவார். 5-10 மணிக்கு நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு. சி. தொடக்கவுரை நிகழ்த்துவார். பின்னர் முதலியார் செ. சின்னத்தம்பி தலைமையுரை நிகழ்த்துவார். 5-45 மணிக்கு பண்டிதர் க. சச்சிதானந்தன் தலைமையில் 'தாய்நாடு தந்ததவம்' என்னும் பொருள்பற்றி நடைபெறும் கவியரங்கில் ச. வே. பஞ்சாட்சரம், க. கா. சோமசுந்தரன், செ. கதிரேசர்பிள்ளை, ச. இராமச்சந்திரன் ஆகியோர் பங்குபற்றுவர்.

மாலை 7 மணிக்கு வவுனியா உள்ளுராட்சி உதவி ஆணையாளர் திரு ந சிவராசா 'தமிழிலக்கிய வரலாறு' என்னும் பொருள் பற்றியும், 'இலக்கிய பயன்' என்னும் பொருள் பற்றி பண்டிதர் சோ. இளமுருகனாரும் சொற்பொழிவாற்றுவர்.

7-50 மணிக்கு ஆரம்பமாகும் கலை நிகழ்ச்சிகளில் காவடியும், 'சாம்ராட் அசோகன்', 'சத்தியவான் சாவித்திரி' நாடகங்களும் வாத்திய இசையும் இடம் பெறுகின்றன.

### ஆணையாளர் ஆசிச் செய்தி

இவ்விழாவையொட்டி உள்ளுராட்சி ஆணையாளர் திரு. டபிள்யு. டி. வி. மகாதந்திலா பின்வரும் ஆசிச் செய்தியை அனுப்பியுள்ளார்.

கிராம மக்களிடையே கலாச்சார சம்பந்தமான பணிகளை ஊக்குவிப்பதும், வளர்ப்பதும் உள்ளுராட்சி மன்றங்கள் பொதுமக்களுக்காற்றும் சேவைகளில் தலையாயதாகும். பொதுமக்களதும், பாடசாலைகளினதும், சனசமூக நிலையங்களினதும், ஆலயங்களினதும் ஒத்துழைப்புடன் ஒழுங்குசெய்யப்படும் இலக்கிய விழாக்கள் இலக்கியத்துறையில் மகத்தான முன்னேற்றத்திற்கு வழிகோல வேண்டும்.

இவ்விழாக்களைக் கொண்டாடுவதுடன் நாம் நின்றுவிடாது கட்டுரைப் போட்டிகள், இலக்கிய மாநாடுகள், கருத்தரங்குகள் என்பனவற்றிலும் கலந்து கொள்ள வேண்டும். அத்துடன் புத்தகக் காட்சிகள், வாசிகசாலைகள், நூல்நிலையங்கள் என்பனவற்றையும் அமைக்க வேண்டும்.

இவ்விழா இலக்கிய, கலாச்சார சம்பந்தமான நிகழ்ச்சிகளை மென்மேலும் விருத்தி செய்வதற்குப் பெரிதும் உதவுமென்றே நம்புகிறேன்.

### உதவி ஆணையாளர் செய்தி

உதவி உள்ளுராட்சி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் விடுத்துள்ள செய்தி வருமாறு:-

"பொருப்பிலே பிறந்துதென்னன் புகழிலே கிடந்து சங்கத் திருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை' இன்று மக்கள் சமுதாயத்தின் உயிர் நாடிகளாயிலங்கும் உள்ளுராட்சி மன்றங்களின் அணைப்பிலே வளர்கிறாள்.

சமீப காலமாக நமது உள்ளுராட்சி மன்றங்கள் பல இலக்கிய வளர்ச்சிக்கான பணிகளில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்திலே முதன்முதலாக வலிகாமம் மேற்குப் பிரிவைச் சேர்ந்த உள்ளுராட்சி மன்றங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரு இலக்கிய விழாவைக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியதே.

இத்தகைய விழாக்கள் கிராமங்கள் தோறும் நடைபெற வேண்டும். மக்கள் தம் இலக்கியச் செல்வங்களைப் போற்றி பேணும் வாய்ப்பை உள்ளுராட்சி மன்றங்கள் இத்தகைய விழாக்கள் மூலம் உருவாக்க வேண்டும். இவ்விழா இத்திருநிலத்துதித்த தமிழ்ச் சான்றோர்களை நம் நினைவுக்கு கொண்டு வருவதுடன் எதிர்காலத் தமிழிலக்கியவளர்ச்சிக்கும் ஏற்ற வகையில் உதவுமென்றே நம்புகின்றேன்.

உள்ளுராட்சி மன்றங்கள் ஊராட்சிக் குரிய பணிகளுடன் மட்டும் நின்றுவிடாது மக்கள் தம் இலக்கிய வளர்ச்சிக்கும் துணைபுரியவேண்டும். சிறந்த நூல்நிலயங்களையும் வாசிகசாலைகளையும் அவை கிராமங்கள்தோறும் நிறுவவேண்டும். நமது மொழியிலுள்ள உயர்ந்த இலக்கியங்களையும் படித்துணர மக்களைத்தூண்ட வேண்டும். காலத்திற்கு காலம் கலைவிழாக்களையும், இலக்கிய விழாக்களையும் நடத்தி மக்களிடையே இலக்கிய உணர்வைப்பெருக்க வேண்டும். இத்தகைய குறிக்கோளை முன்வைத்தே சாகித்திய விழாவை மாபெரும் தமிழிலக்கிய விழாவாக நாம் கொண்டாடுகின்றோம். எதிர்காலத்தில் நமது உள்ளுராட்சி மன்றங்கள் அனைத்தும் இத்தகைய விழாக்களை நடத்த முன்வருதல்வேண்டும்."

### பண்புள்ள இலக்கியம் தேவை

இராசவாசல் முதலியார் சி. தியாகராசா இவ்விழாவையொட்டி விடுத்துள்ள ஆசிச் செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"இன்று ஈழநாட்டுத் தமிழ்மக்களிடையே என்றுமில்லாவகையில் தமிழார்வம் மிகுந்துள்ளது. நாடெங்கும் தமிழ்விழாக்களும், கலைவிழாக்களும்நடைபெற்று வருகின்றன. இவ்விழாக்களின் மூலம் மக்களிடையே தமிழுணர்ச்சியும், கலையுணர்ச்சியும் பெருகி வருகிறது. வலிகாமம் மேற்கு உள்ளுராட்சி மன்றங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து இவ்வாண்டு சாகித்திய விழா எடுப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை நல்குகிறது. இவ்விழா சகல துறைகளிலும் சிறந்து விளங்குமென்பதில் ஐயமில்லை,

இயல், இசை, நாடகம் என்னும் மூவகைத் தமிழையும் முன்னுளில் முனிவரும், மன்னரும் முன்னின்று வளர்த்தனர். இந்நாளில் அப்பணி உள்ளுராட்சி மன்றங்களையே சார்ந்துள்ளது. நமது உள்ளுராட்சி மன்றங்கள் ஒவ்வொன்றும் இத்துறையில் ஈடுபடவேண்டுமென்பதே எனது ஆசை. இவ்வேளையில் நமது எழுத்தாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் ஒரு விடயத்தை மட்டும் நினைவூட்ட விரும்புகிறேன்.

### பண்பாட்டைப் பேணுக

தமிழ்மொழி தன்னிகரற்றது அது எல்லையறு பரம்பொருள் போல் என்றுமே இருந்துவருகின்றது. அதன் அழகையும் சிறப்பையும் அணிசெய்ய வேண்டிய கடமை நமது எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் பெரிதும் சார்ந்துள்ளது.

தமிழிலக்கியம் தமிழினத்திற்குத் தனிப்பெருஞ் செல்வம். அச்செல்வத்தை நாமும் துய்த்துப் பிறர்க்கும் வழங்கவேண்டுமாயின் நமது எழுத்தாளர்கள் தமிழ்ப்பண்பாட்டையும் மரபையும் பாதுகாக்கும் காவலர்களாக மிளிரவேண்டும். போட்டி, பொறாமை போன்றவற்றைத் தூரவிலக்கித்தமிழ்ப் பணிக்குத் தம்மையர்ப்பணிக்க முன்வரவேண்டும். செந்தமிழிலக்கிய மரபுவழி நின்று நமது வாழ்க்கையை வளம்படுத்த வல்ல பண்புள்ள இலக்கியங்களைப் படைக்க முயலவேண்டும். பண்புள்ள சமுதாயத்திற்றான் பண்புள்ள இலக்கியங்கள் மலரமுடியும் என்னும் பேருண்மையினை நமது எழுத்தாளர்கள் நன்குணரவேண்டும்."

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

#### சனி 10-10-64

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை. 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாரசாரம். 7-00 இசை சித்திரம்—பகவதி ரங்கராஜன், கமலா ஹரிகரஐயர் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு—'நூல் நிலைய சேவை'-எஸ். முருகவேள், 9-30 ஆர். முத்துசுவாமி—வயலின், 10-00 நேயர் விருப்பம்.

#### ஞாயிறு 11-10-64

காலை 6-45 பாமாலை, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை. 7-15 தேர்ந்த இசை, 7-45 இசைப் பயிற்சி, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞ ஞஞ்சலி. 9-00 பேருவளை தர்க்கா அஞ்சல், 9-30 கிறிஸ்தவ நிகழ்ச்சி.

பகல் 11-30 சிறுவர் மலர், 12-45 நேயர் விருப்பம், 1-00 மாதர் நிகழ்ச்சி

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 விஜய சௌந்தரி தாமோதரம்பிள்ளை—பாட்டு, 5-45 திரை இசை. 6-10 நேயர் கடிதங்கள், 6-15 தாள வாத்தியக் கச்சேரி. 6-45 வீணை, 7-00 சரோஜினி தனபாலசிங்கம் — பாட்டு, 7-30 நாடகம் 'வாழ்க்கை'—கிறிஸ்டைன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 மாணவர் மன்றம், 8-30 நேயர் விருப்பம், 9-15 மாதர் கேட்டவை, 9-45 தேர்ந்த இசை, 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

### திருச்சி

#### சனி 10-10-64

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள் வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 ஸ்ரீவெங்கடேச்வரஸுப்ரபாதம், 7-50 இடைவேளை—இசைத்தட்டு.

பகல் 1-00 பிள்ளைக்கனி அமுது (எட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு நிகழ்ச்சி), 1-20 கதம்பம் (இசைத் தட்டுகள்), 1-50 வாத்திய இசை (இசைத் தட்டுக்கள்), 2-10 மஹாலக்ஷ்மி பேரில் பாடல்கள்.

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 வாத்திய இசை.

இரவு 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 நாடகம் 'மன மாளிகை' — சி. பி. குமாரவேலு, 8-45 மெல்லிசை, 9-30 மதுரை மணி ஐயர்—பாட்டு.

#### ஞாயிறு 11-10-64

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள் வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 திருமகள்—இசைச் சித்திரம். 8-15 கசீலா அச்சுதராமன்—பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை - (இசைத் தட்டுக்கள்), 12-30 சூரியகாந்தி—கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணிமாலா பாட்டு, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 கும்பகோணம் வி. பி. ராஜேஸ்வரி-பாட்டு.

மாலை 5-15 வீணை, வயலின் ஆ. இ. ரே. வித்வான்கள், 5-45 இசைப்பயிற்சி, 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 சிலப்பதிகார உரையாசிரியர்கள்-சி. திருமேனி -பேச்சு, 7-45 பி. மலையப்பசாஸ்திரி-பாட்டு, 9-30 மெல்லிசை, 9-45 ருக்மணி கல்யாணம்—சங்கீதஉபந்நியாசம்-பிக்ஷாண்டார்கோவில் ஜி. பாலசுப்ரமணிய பாகவதர்.

---

## சுகாதார சபையின் நாடக விழா

சுழிபுரம். வெள்ளி பண்டத்தரிப்பு சுகாதார சபையினர் தமது சபையின் வளர்ச்சிக்காக "பாசத்தின் பரிசு" என்ற நாடகத்தை நடத்தினர். நாடகம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. புலவர் கா. வேல்முருகன் தமது தலைமையுரையில் பேசுகையில் நாடக மூலம் சமூகத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்தவேண்டுமென்றும் அதன்மூலம் சமூகம் முன்னேறப் பாடுபடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்

"உங்கள்
கிரேசன்ஸ் வேப்பர் கிறீமை
ஒருமுறை தடவியவுடன்
அடுத்த நாள் காலையில்
நெஞ்சு நோ, தடிமன் ஆகிய
இரண்டும் மாறிவிட்டன"
திருமதி எம். டி. பி.




உங்கள் குழந்தையின் நன்மைக்காக எப்பொழுதும் கிரேசன்ஸ் வேப்பர் கிறீமையே கேட்டுவாங்குங்கள்.
எல்லா மருந்துக் கடைகளிலும், பலசரக்குக் கடைகளிலும் கிடைக்கும்.

"நவராத்திரி பூஜை"
ஆலயங்களுக்குத் தேவையான அபிஷேக
திரவியங்கள், பூஜை நைவேத்தியப் பொருட்களும்
திறம் விளைவு சூடம்
உடன் அரைத்த
பச்சை சந்தனம்
எப்போதும் கிடைக்கும்
சுந்தரம் பிறதேர்ஸ்
மருந்துச் சரக்கு வியாபாரம்
73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

விஜயலெட்சுமி
ஆபரண மாளிகை
ஆஸ்பத்திரி வீதி, — ஊர்காவற்றுறை



சிறந்த
நகை உற்பத்தியாளர்களால்
அழகிய
வேலைப்பாடுகள் நிறைந்த
தங்கப் பவுண்
வைர நகைகளை
தற்காலத்திற்கேற்ற டிசைன்களில் தயார் செய்து
உங்களை திருப்தி செய்யக் காத்திருக்கிறோம.
எமது ஆபரண மாளிகைக்கு
ஒரு முறை விஜயஞ்செய்யுங்கள்.

எந்நேரத்திலும் எப்பொழுதும் மகிழ்ச்சி ஊட்டும்
பிராங்கோ சாக்கலேட்டுகளைச் சுவைக்கலாம்.
சுவிட்சர்லாந்தின் உயர்ந்த தரத்திற்கேற்ப
தெரிவு செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு
தயாரிக்கப்பட்ட பிராங்கோ சாக்கலேட்டுக்கள்
இப்பொழுது காற்றுப்புகாதவண்ணம் அடைக்கப்
பட்டு புதுமையுடனும் எழிலுடனும் மிளிருகிறது.
எனவே
எல்லோரும் இலங்கையில் சிறந்த பிராங்கோ
சாக்கலேட்டுக்களை விரும்புகிறார்கள் என்பதில்
ஆச்சர்யம் எதுவுமில்லை
இன்றே
பிராங்கோ சாக்கலேட்டுகளை சுவைத்துப்பாருங்கள்.
இப்பொழுது மகிழ்ச்சி தரக்கூடிய
பிராங்கோ சாக்கலேட்டுக்களைச் சுவையுங்கள்.
ஈ. பிரான்சிஸ் பெரரா அன் கோ.,
10-12, யாரின் நுவர வீதியா, கண்டி. தொலைபேசி: கண்டி 590
கொழும்பு காரியாலயம்: 234, மெசன்சர் தெரு, கொழும்பு-12 தொலைபேசி: 7565

# இன்று டோக்கியோவில் ஆரம்பமாகும் ஒலிம்பிக்போட்டிகள்

## 90 நாடுகளைச்சேர்ந்த 5000 வீரர்பங்குபற்றுகின்றனர்

பதினெட்டாவது சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் (அக்டோபர்) 10ம் திகதி தொடக்கம் 24ம் திகதிவரை ஜப்பானின் தலைநகராகிய டோக்கியோவில் நடைபெறும். இப்போட்டிகளில் சுமார் 90 நாடுகளைச் சேர்ந்த 5000க்குமேற்பட்ட விளையாட்டு வீரர்கள் கலந்துகொள்வர். பெரிய விளையாட்டுக் கோஷ்டிகளை ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, ஜெர்மனி (கிழக்கும் மேற்கும் சேர்ந்து) போன்ற நாடுகள் அனுப்பியுள்ளன. புதிதாக பல உலக சாதனைகளை நிலைநாட்டியிருக்கும் வீரர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றுவதால் பல ஒலிம்பிக் விளையாட்டுச் சாதனைகளும் சில உலக சாதனைகளும் முறியடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1896-ல் இக்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்பு இம்முறைதான் முதன் முதலாக இப்போட்டிகள் ஆசியாவிலுள்ள ஒரு நகரில் நடைபெறுகின்றன.

"வெற்றியீட்டுவதிலும் பார்க்க இப்போட்டிகளில் கலந்து கொள்வதே முக்கியமானது" என்பது ஒலிம்பிக் விளையாட்டுகளின் குறிக்கோளாகும். இப்போட்டிகளில் பங்குபற்றுவதற்காக ஒரு நாட்டின் சார்பில் தெரியப்படுவதற்கு ஏற்ற தகுதியை அடைவதை விளையாட்டு வீரர்கள் தமக்குக் கிடைக்கக்கூடிய பெரிய கௌரவமாக மதித்துவருகின்றனர்.

### ஆதிகாலத்தில்.....

இப்போட்டிகள் கிரேக்க நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவந்தன. கிரீஸின் தென்பாகத்தில் ஆல்பியூஸ் என்ற நதிக்கரையில் குரோனோஸ் மலையடிவாரத்தில் ஒலிம்பியா என்ற பெயரில் ஒரு கிராமம் இருக்கின்றது. இந்தக் கிராமத்தில் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன என்றும் இப்போட்டிகளை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டுகளித்தனர் என்றும் சரித்திரவாயிலாக அறிகின்றோம்.

2740 ஆண்டுகளுக்கு முன் கி. மு. 776ல் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் முதன் முதலாக நடைபெற்றிருக்கலாமென்று நம்பப்படுகின்றது. இக்காலத்திற்குமுன்பும் கிரேக்கர்கள் இவ்விளையாட்டுக்களை நடாத்திவந்திருக்கலாம். ஒலிம்பிக் விளையாட்டுகளை ஆதாரமாகக்கொண்டே கிரேக்கர்கள் வருடங்களைக் கணக்கிட்டுவந்தனராம்.

ஆரம்பகாலத்தில் ஆண்களே இப்போட்டிகளில் பங்குபற்றினர். சில விளையாட்டுப் போட்டிகளுக்குப் பின் பெண்களும் கலந்துகொள்ளுவதற்கு அனுமதியளிக்கப்பட்டது. கி. மு. 146ல் உரோமர்கள் கிரீஸைக் கைப்பற்றியதும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் பிரபல்யம் குன்றத் தொடங்கியது. ரோம் சக்கரவர்த்தியாக இருந்த முதலாவது தியோடோசியஸ் கி. பி. 394ல் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளுக்கு தடையுத்தரவு விதித்தார்.

### இக்கால ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகள்

இக்கால ஒலிம்பிக் விளையாட்டுகளின் போட்டித்தொடர் கிரேக்க தலைநகராகிய அதென்ஸில் 6-4-1896ல் ஆரம்பமாகியது. இப்போட்டிகளைத் தொடக்குவதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர் பிரெஞ்சுப் பிரமுகர் பரன் பியரே டி குபேட்டின் என்பவராவர். இவரே இக்கால "ஒலிம்பிக் விளையாட்டுகளின் பிதா" என்று அழைக்கப்படுகிறார். அவ்வருடம் தொடக்கம் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை (உலக மகாயுத்த காலங்கள் நீங்கலாக) ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் பின்வரும் நகரங்களில் நடைபெற்றுவந்திருக்கின்றன:-

1896—அதென்ஸ்; 1900—பாரிஸ்; 1904—செயின் லூயி; 1908—லண்டன்; 1912—ஸ்ரொக்ஹோம்; 1916—நடைபெறவில்லை; 1920—அன்ற்வேப்; 1924—பாரிஸ்; 1928—அம்ஸ்டர்டாம்; 1932—லொஸ் ஏஞ்சலஸ்; 1936—பேர்லின்; 1940—நடைபெறவில்லை; 1944—நடைபெறவில்லை; 1948—லண்டன்; 1952—ஹெல்சிங்கி; 1956—மெல்போண்; 1960—ரோமாபுரி; 1964—டோக்கியோ.

1968-ல் இப்போட்டிகள் மெக்சிக்கோ நகரத்தில் (மத்திய அமெரிக்கா) நடைபெறும்.

1928 தொடக்கம் இப்போட்டிகளில் பெண்கள் பங்குபற்றி வருகின்றனர்.

### 163 தங்கப் பதக்கங்கள்

இம்முறை டோக்கியோவில் நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் இருபது வகையான விளையாட்டுகள் இடம் பெறுகின்றன. இம்முறை கைப்பந்தாட்டமும்; 'ஜூடோ' வும் சேர்க்கப்பட்டுள்ளன. நிகழ்ச்சிகளில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடங்களைப் பெறும் வீரர்களுக்கு அல்லது கோஷ்டிகளுக்கு முறையே தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம், வெண்கலப் பதக்கம் வழங்கப்படுவது வழக்கம். இம்முறை இப்போட்டிகளில் எல்லாமாக 163 தங்கப் பதக்கங்கள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது. 1960-ல் 152 தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. அவ்வருடத்தில் இவற்றில் 43 சோவியத் ருஷ்யாவுக்கும் 34 ஐக்கிய அமெரிக்காவுக்கும் கிடைத்தன.

### ரஷ்யாவுக்கு அதிக தங்கப்பதக்கங்கள்

"ஸ்போட்ஸ் இலஸ்ட்ரேடட்" என்ற அமெரிக்க வாராந்த செய்தித்தாள் இம்முறை ரஷ்யாவுக்கு 41 தங்கப் பதக்கங்களும், ஐக்கிய அமெரிக்காவிற்கு 35 தங்கப் பதக்கங்களும் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கின்றது.

ஏனைய நாடுகளுக்குக் கிடைக்கக் கூடிய தங்கப் பதக்கங்களின் எண்ணிக்கை பின்வருமாறு என்று ஜோஷ்யம் கூறியிருக்கிறது:-

ஜப்பான் 13; ஜேமனி 9; ஹங்கேரி 9; அவுஸ்திரேலியா 7; துருக்கி 6; இத்தாலி 5; போலந்து 5.

"அத்லெற்றிக்ஸ்" (ஓடுதல் பாய்தல், எறிதல்) என்ற பிரிவில் 36 தங்கப் பதக்கங்கள் வழங்கப்படும். இவற்றில் பெரும் பகுதி ஐக்கிய அமெரிக்காவிற்கே கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போட்டிகளின் பெறுபேறுகள் பதக்க அடிப்படையிலோ புள்ளிகள் அடிப்படையிலோ உத்தியோக பூர்வமாக கணக்கிடப்படுவதில்லை ஆனால் உத்தியோக பூர்வமற்ற வழிகளில் இவை கணக்கிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. "யாருக்கு முதலிடம்" என்று நிர்ணயிப்பது ஒலிம்பிக் விளையாட்டுகளின் இலட்சியத்திற்கு முரணானதாகக் கருதப்படுகின்றது.

### கோழிக்குஞ்சும் முட்டைகளும்

இப்போட்டிகளை நடத்துவதற்கு சுமார் இரண்டரைக் கோடி பவுண் செலவாகும். தொடர்பான திட்டவேலைகளுக்கு சுமார் 67 கோடி பவுண் செலவாகியுள்ளதாம்! சுமார் 80,000 பேர் இருந்து பார்க்கக் கூடிய இடவசதியுள்ள விளையாட்டரங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. 1958-ல் டோக்கியோவில் மூன்றாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்திய அனுபவம் ஜப்பானியருக்கு இருக்கிறது. ஜப்பானிய ஹோட்டல் சங்கம் இப்போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் உட்கொள்ளக்கூடிய உணவுப் பொருட்களை பின்வருமாறு கணக்கிட்டுள்ளது. 840 மாடுகள்; 280 பன்றிகள்; 60,000 கோழிக் குஞ்சுகள்; 7,20,000 முட்டைகள்; 65,000 ரொட்டிகள். இவற்றைச் சேமித்து வைத்துள்ளன.

—வை. மகாதேவன்


8வது வெற்றி வாரம்!

ஸ்ரீ மனோகரா

(யாழ்ப்பாணம்) போன்: 485

தினசரி 6-30 9-30க்கு மட்டு

சனி, ஞாயிறு 4 காட்சிகள்



பாலசர்மா ● அசோகன்

டி.கே. பகவதி ● நரசிம்மபாரதி

ஜெயஸ்ரீ ● விஜயலக்ஷ்மி

மற்றும் பலர் நடித்த

சம்பூர்ண மகாபாரதம்

REGAL — JAFFNA

NOW SHOWING

Reg Park in

HERCULES IN THE CENTRE OF THE EARTH

(Techniscope - Color)

மங்களகரமான 2வது வாரம்!

சிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

குயின்ஸன் (நுகேகொடை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு)

வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)



எம். ஜி. ராமச்சந்திரன் - சரோஜாதேவி

மற்றும் பலர் நடிக்கும்

பணக்கார குடும்பம்


## கைத்தொழில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 400 பரிசுபெறும் டிக்கட்டுகளின் இலக்கங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| 12 W 0379 | 21 W 0022 | 02 W 0359 |
| 13 M 0169 | 15 D 0897 | 09 N 0291 |
| 14 Z 0548 | 18 N 0966 | 08 X 0929 |
| 09 E 0676 | 17 M 0762 | 13 V 0707 |
| 06 U 0425 | 02 Q 0594 | 15 X 0761 |
| 06 D 0180 | 07 Z 0307 | 01 J 0067 |
| 03 H 0379 | 01 X 0837 | 21 Z 0781 |
| 06 P 0758 | 17 C 0924 | 11 K 0466 |
| 23 B 0659 | 07 U 0172 | 08 J 0298 |
| 22 Y 0226 | 07 D 0624 | 09 S 0131 |
| 20 W 0429 | 03 I 0382 | 02 B 0967 |
| 07 F 0702 | 17 W 0232 | 09 X 0270 |
| 17 R 0337 | 05 S 0559 | 12 B 0822 |
| 02 K 0106 | 19 U 0611 | 19 L 0426 |
| 19 L 0806 | 07 K 0338 | 21 C 0359 |
| 08 J 0303 | 08 G 0482 | 22 X 0429 |
| 16 I 0209 | 24 G 0626 | 24 E 0332 |
| 10 M 0144 | 22 C 0218 | 02 W 0850 |
| 01 S 0850 | 05 G 0454 | 06 K 0232 |
| 19 N 0497 | 21 D 0221 | 07 H0 688 |
| 06 I 0882 | 19 J 0181 | 05 J 0847 |
| 11 V 0504 | 06 X 0107 | 03 R 0155 |
| 08 H 0847 | 12 D 0939 | 04 G 0083 |
| 08 Z 0568 | 08 M 0184 | 03 Q 0064 |
| 11 H 0605 | 18 I 0044 | 17 W 0582 |
| 11 K 0185 | 12 W 0428 | 16 D 0988 |
| 26 K 0035 | 08 D 0160 | 02 A 0179 |
| 21 X 0564 | 14 C 0820 | 22 Y 0563 |
| 07 A 0764 | 03 N 0305 | 17 E 0889 |
| 22 I 0586 | 24 K 0678 | 12 C 0340 |
| 23 Y 0877 | 05 E 0160 | 21 E 0247 |
| 22 M 0990 | 08 L 0553 | 05 Y 0201 |
| 02 F 0039 | 22 K 0845 | |
| 24 V 0987 | 10 B 0647 | |

தலா ரூபா 250 பெறும் 24 பரிசுகள்.

| | | |
|---|---|---|
| 20 A 0220 | 20 B 0220 | 20 C 0220 |
| 20 D 0220 | 20 E 0220 | 20 F 0220 |
| 20 G 0220 | 20 H 0220 | 20 I 0220 |
| 20 J 0220 | 20 K 0220 | 20 L 0220 |
| 20 M 0220 | 20 N 0220 | 20 P 0220 |
| 20 Q 0220 | 20 S 0220 | 20 T 0220 |
| 20 U 0220 | 20 V 0220 | 20 W 0220 |
| 20 X 0220 | 20 Y 0220 | 20 Z 0220 |

## நவராத்திரி விழா

பத்ருதித்துறை, வெள்ளி புலோலி தெற்கு மெதடிஸ்த தமிழ் கலவன் பாடசாலை இந்து மன்றம் நவராத்திரி தினங்களின் இறுதி மூன்று நாள் விழாக்களையும் சிறப்பானமுறையில் கொண்டாடுவதென முடிவுசெய்துள்ளது. இறுதிநாளைய விழாவன்று பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை பிரதம பேச்சாளராக கலந்துகொள்வார். அன்று மாணவிகளது நடனம், இசை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.


காணி எடுத்தற் சட்டம் (அத். 460) 39(1)ம் பிரிவின்படி காணி எடுத்தல் கட்டளையை அழித்தல்

இல. J 63/64 L G 1074

QE 265

9-9-64-ல் வெளியாகிய 1964-ம் ஆண்டின் 425-ம் கட்டளையின்படி காணி எடுத்தற் சட்டம் (அத். 460) 38 (அ) பிரிவின்படி 1964-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ந் திகதி வெளியான 14,166 இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதின் பிரகாரம் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி மாட்சிமைதங்கிய மகாராணியார் வசம் கொடுக்கப்பட்டது. மாட்சிமை தங்கிய மகாராணிக்குப் பதிலாக எவரும் இதுவரை குறித்த காணியை ஒப்புக்கொள்ளவில்லை.

எனவே இப்பொழுது காணி, நீர்ப்பாசன மின்சார மந்திரியாகிய சால்ஸ் பேசில் டி' சில்வா ஆகிய நான் காணி எடுத்தற் சட்டம் (அத். 460) 39(1)ம் பிரிவின்படி எனக்களித்த அதிகாரத்தை பிரயோகித்து 9-9-64-ல் வெளியாகியதும் 11-9-64ல் பிரசுரிக்கப்பட்ட 14,166ம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளதுமாகிய குறித்த கட்டளையை இவ்வறிவித்தலால் அழித்துவிடுகிறேன்.

சி. பீ. டி. சில்வா

காணி, நீர்ப்பாசன மின்சார மந்திரி

கொழும்பு,

29-9-64

அட்டவணை

கொழும்பு மாவட்டம், சல்பிற்றி கோறளே காரியாதிகாரி பிரிவில் கல்தேமுல்ல கிராமத்தில் குட்டெறியாவத்தை காணியில் சுமார் 71 ஏ- 3று- 10·06 பே. எல்லைகள்:-

வடக்கு- குறுக்கு றோட்டும் ஒஸ்டின் குறேயும் மற்றோரும் உரிமை கேட்கும் காணியும்.

கிழக்கு- கோவிலுக்கு ஒதுக்கப்பட்ட காணியும் அதே காணியின் மிகுதிப் பகுதியும்.

தெற்கு- அங்குலான ஸ்டேசன் றோட்.

மேற்கு- அதே காணியின் மிகுதிப் பகுதியும் பிரத்தியேக காணிகளும்.

வரி விளம்பரம்

அனுபவம் வாய்ந்த சீன நிபுணரால் இயற்கை அமைப்புக்கேற்ப பற்களைக் கட்டுவதற்கு உகந்த இடம் யாழ்ப்பாணத்தில் இது ஒன்றே. கண் பார்வை பரிசோதனை செய்தும், டாக்டரினால் சிபார்சு செய்த கண்ணாடிகள் அழகிய பிரேம்களில் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். எஸ். எம். பெர்னாண்டோ, பிரதானவீதி, முதலாம் குறுக்குத் தெரு சந்தி, யாழ்ப்பாணம். 895

விற்பனைக்கு

சிறந்த முறையில் பாவிக்கப்பெற்ற 33 Sri 4384 — 15 அர் தர் கொமர் வான் யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் விற்பனைக்கிருக்கின்றது. கந்தோர் நேரங்களில் பார்வையிடலாம். 1013

தேவை

சித்த ஆயுர்வேத ஆஸ்பத்திரிக்கு தராதரப்பத்திரமுடையவைத்தியர்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும் டாக்டர் நா. இரத்தினசபாபதி, பிரத்தியேக ஆஸ்பத்திரி, கரம்பன், ஊர்காவற்றுறை. 1017

சைக்கிள்கள் விற்பனைக்குண்டு

எனது சொந்த உபயோகத்திலுள்ள ஏழு சயிக்கிள்கள் விற்பனைக்குண்டு. க. தம்பிராசா, 180, ஆடியபாத வீதி, கல்லூர் மார்க்கெட். 1015

தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலைக் இலும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணானந்தா கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


### திருத்தம்

9-10-64-ல் வெளிவந்த கதையா பரமு அவர்களின் அடைவு கடை ஏல விற்பனையில் "வாடகைக்கு" என தலைப்பிலுள்ளதை தவிர்த்துவாசிக்கவும். 924

# யாழ்ப்பாணத்தில் உதவிக் கல்வி மந்திரி

## தொழில்நுட்பக் கல்லூரி புகார் பற்றி விசாரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியில் நேற்றுக் காலை உதவி கல்வி மந்திரி திரு. எஸ். கே. சூரியராச்சி கல்லூரி சம்பந்தமாகச் செய்யப்பட்ட புகார்கள் பற்றி விசாரணைசெய்தார். பலர் கொடுத்த வாக்கு மூலங்களையும் அவர் பதிவு செய்தார். சில வாக்கு மூலங்கள் இரகசியமாகப்பதிவு செய்யப்பட்டன.

பலவிதமான நிர்வாக ஊழல்கள் பற்றியும் நிர்வாகத்தின் ஒரு தலைப்பட்ச நடவடிக்கைகள் பற்றியும் பல முறைகளில் பலர் கல்லூரி நிர்வாகத்தினருக்குத் தெரிவித்த போதிலும் அதற்கு செவிசாய்காததன் காரணத்தினலேயே பல சங்கங்களும் மற்றும் பலரும் கல்வி மந்திரிக்குப் புகார் செய்தனர் என்றும் இதனலேயே உதவி கல்விமந்திரி நேரில்வந்து விசாரணை செய்தாரென்றும் தெரிகிறது. அகில இலங்கைவர்த்தகலை மன்றத்தின் காரியதரிசி திரு மா. புவனேந்திரன் உதவிமந்திரி முன் இன்று சாட்சியம் கொடுத்தபோது பின்வரும் விபரங்களைத் தெரிவித்தார்.

தற்பொழுது யாழ். தொழில்நுட்பக் கல்லூரியினல் நடாத்தப்படும் பரீட்சைகளை, உடனடியாகப் பரீட்சைப் பகுதியினர் ஏற்று நடத்தவேண்டும்.

கணக்கியல் தகுதி தேர்வுப் போதனையினம், வணிக தகுதிப் போதனையினம் ஆகிய வகுப்புக்கள், தொழில் நுட்பக் கல்லூரியில் நடத்தப்படல் வேண்டும்.

எஸ். எஸ்.ஸி. யில் வர்த்தகப் பாடங்களுடன் சித்தியடைந்தவர்களை இரண்டாம் வருட வர்த்தக வகுப்புக்களுக்கு அனுமதிக்கவேண்டும்.

பலாலியில் நடத்தப்படும் ஆசிரிய பயிற்சி வகுப்புகளை தொடர்ந்து அங்கேயே நடத்தவேண்டும். யாழ். தொழில் நுட்பக் கல்லூரி இந்தவகுப்பை நடத்த எடுக்கும் முயற்சிக்கு இடங்கொடுக்கக்கூடாது.

யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. அல்பிரட் துரையப்பா இன்று வாக்குமூலம் கொடுக்க இருந்தாரெனினும் அவர் அங்கு பிரசன்னமாயிருக்கவில்லையென்று தெரிகின்றது.

வடபகுதியில்

# "கள்ளக்கடத்தலை தடுக்க நல்ல படகுகள் இல்லை"

## சுங்கப்பகுதி பிரதம கலெக்டர் அறிக்கை

கொழும்பு, வெள்ளி

சுங்கப் பகுதிப் பிரதம கலெக்டரின் நிர்வாக அறிக்கையில் வடபகுதித் துறைமுகங்களில் ரூபா 2,734,914 பெறுமதியான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன என்றும் பிரதானமாக ஓடு, பீடி இலைகள், பீடிப் புகையிலை முதலியனவே இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களாகும் என்றும் அதேகாலத்தில் தேயிலையும், தெங்குப்பொருட்களும், 1,160,00 ரூபாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதித் துறைமுகங்களில் ரூபா 1,457,644 வருமானம் கிடைத்துள்ளது. இவற்றுள் ரூபா 387,714 சுங்க இலாகாவினல் இந்திய 'குட்செட்'டில் உள்ள பொருட்களுக்கு விதிக்கப்பட்ட தீர்வையாகும். வடபகுதியில் கள்ளக் கடத்தல்களைச் சிறந்த முறையில் தடைசெய்வதற்கு நன்கு கடலில் செல்லக்கூடிய படகுகள் இல்லாதது ஒரு பெரும் குறையாக இருக்கிறது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண விமானநிலையத்தில் செலவணிக் கட்டுப்பாட்டுச் சட்டங்களை மீறிய 34 நபர்களிடமிருந்து பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

தலைமன்னர் துறைமுகத்திலிருந்து ரூபா 125,892-35 தீர்வையாக வசூலிக்கப்பட்டது. கொழும்பிலிருந்து இந்தியா செல்லும் பிரயாணிகளுக்கு ஒரு கஷ்டமும் ஏற்படாத வகையில் அவர்களுடைய பொருட்கள் கொழும்பில் பரிசோதனைசெய்யப்பட்டு முத்திரை பதித்து அனுப்பப்படுகின்றன. இந்த முறையின் கீழ் பிரயாணிகள் வெகுநேரம் தாமதிக்கவேண்டிய நிர்ப்பந்தம் குறைக்கப்பட்டுள்ளது.

# "பிற்பகலிலும் கடுகதி பஸ் சேவை"

## திருமலை - யாழ்ப்பாணம் பிரயாணிகள் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் - திருக்கோணமலை பஸ் பிரயாணிகள் சங்கம் திருக்கோணமலை இ. போ. ச டெப்பிரிண்டனுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் திருக்கோணமலைக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே பிற்பகல் நேரத்தில் கடுகதி பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்குமாறு கோரியுள்ளது.

"பிற்பகல் நேரங்களில் கடுகதி பஸ் சேவை இல்லாததால் யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கோணமலை செல்லும் பிரயாணிகள் மிகுந்த கஷ்டம் அனுபவிக்கிறார்கள். இரு இடங்களுக்கும் தினசரி அதிகமானவர்கள் பிரயாணம் செய்கிறார்கள். பிரயாணிகளின் வசதியை முன்னிட்டு யாழ்ப்பாணம் - திருக்கோணமலை (பிற்பகல்) பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். கடுகதி பஸ் யாழ்ப்பாணத்திலிருந்து பிற்பகல் 2 மணிக்கு புறப்பட்டு திருக்கோணமலையை பிற்பகல் 9 மணிக்குப் போய் சேரக்கூடியதாக இருக்கவேண்டும்" என்றும் அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

# இரு கோஷ்டியினர் கைகலப்பு

காங்கேசந்துறை, வெள்ளி

நேற்று முன் தினம் கீரிமலையில் ஏற்பட்ட ஒரு சச்சரவினல் பஸ் சாரதி காண்டக்டர் பிரயாணிகள் முதலியோருக்கும் இன்னேர் பகுதியினருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதாகவும் இதன் விளைவாக விசாலாட்சி, இளையகுட்டி, செல்வராஜா, தருமலிங்கம் ஆகியோர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது. நாகராஜன் என்பவர் தலைமறைவாக இருப்பதாகவும், அவரை பொலிஸார் தேடி வருவதாகவும் தெரிய வருகின்றது.

# சதி வழக்கு விசாரணை

கொழும்பு, வெள்ளி

புரட்சி சதி வழக்கில், அட்டோர்னி ஜெனரலின் குறுக்கு விசாரணைகளுக்கு கேணல் டி சேரம் நேற்று தொடர்ந்து பதிலளித்தார். கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில்; பொது வேலைநிறுத்தம் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ம் திகதி தான் நடைபெறுமென்று இராணுவம் எதிர்பார்த்ததென்றும் அன்று, தாம் டீ. லி. திஸநாயக்காவைச் சந்தித்தபோது அன்று இடதுசாரிகள் கைது செய்யப்படவிருப்பதாக அவர் தம்மிடம் தெரிவித்தார் என்றும் கூறினர்.

கேணல் டி சேரத்தை அட்டோர்னி ஜெனரல் தொடர்ந்து குறுக்குவிசாரணைசெய்தபோது அவர் தெரிவித்ததாவது:

"பொது வேலை நிறுத்தம் ஆரம்பித்ததும் நான் எனது திட்டத்தை நிறைவேற்றவிருந்தேன். இடதுசாரிகளை கைது செய்யமுனைனர், பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவையும். என். கியூ. டயஸையும் கைது செய்யவிருந்தேன். பீலிக்ஸை கைதுசெய்யும் பொறுப்பு லி. லி. திஸநாயக்காவிடமும் என். கியூ. டயஸை கைது செய்யும் பொறுப்பு ஸ்டான்லி சேனநாயக்காவிடமும் இருந்தது.

பீலிக்ஸின் நடவடிக்கைபற்றி பிரதமருக்குத்தெரியும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. அதற்கு மாறாக பிரதமருக்கும் விஷயம் தெரிந்திருந்தால் அவரைகைது செய்வது அரசாங்கத்தைக்கவிழ்ப்பதாகும்என்று கருதினேம்.

அலரிமாளிகைக்கும் பிரதமருக்கும் பாதுகாப்புத் தேவையில்லை என்று கருதினேன். பீலிக்ஸ், பிரதமரை அணுகி அவரைத் தன் வழிக்குத் திருப்பக் கூடும் என்று நினைத்தேன். நான் எனது நடவடிக்கைகளில் இறங்குவதற்கு தகவலைப்பொறுத்த வரையில லி. லி. திஸநாயக்காவைத்தான் நம்பியிருந்தேன். யார், யாரைகைது செய்வது, எப்போது கைதுசெய்வது என்பதையெல்லாம் சி. ஐ. டி, பொலிஸிலிருந்து தகவல்பெற்றுத்தருவதாக லி. லி. திஸநாயக்கா எனக்கு வாக்குறுதியளித்திருந்தார். எதிர்க்கட்சித் தலைவர்களை கைதுசெய்யும் விஷயமாக ஐ. ஜி. பி., லி லி. திஸநாயக்காவிடம் பேசிய போது எதிர்க்கட்சித்தலைவர்களைக்கைது செய்வதை லி.லி. திஸநாயக்கா எதிர்த்தார்.

(விசாரணை இன்று தொடர்ந்து நடைபெறும்.)

## மாநகரசபை...

(1-ம பக்கத் தொடர்ச்சி)

திட்டங்களுக்கு அமைய இத்தீர்மானம் இருப்பதால் இத்தீர்மானத்தை சபையில் கொண்டுவர அனுமதி அளிப்பதாகக் கூறினர்.

இதனை ஆட்சேபித்து திருவாளர்கள் எஸ். நாகராசா, எம். எஸ். பேரின்பநாயகம், தம்பு கந்தையா, ஏ. ஜி. ராஜசூரியர், ஹாஜி அப்புசாலி ஆகியோர் கூட்டத்தை விட்டு வெளியேறினர்.

இதைத் தொடர்ந்து மின்சாரம் விநியோகம் சம்பந்தப்பட்ட வேலையை ஒப்பந்தம் மூலம் கொடுக்க வேண்டுமென்று திரு நா த. செல்லத்துரை கொண்டுவந்த தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டது.

# சீனுவின் விருப்பம்

புதுடில்லி, அக் 9

கொழும்பு பிரேரணைகள் அடிப்படையில் இந்திய-சீன எல்லைப்பிரச்னைக்கு தீர்வுகாண தாம் விரும்புவதாக சீனு இந்தியாவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. பீக்கிங்கிலுள்ள இந்திய தூதரகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் ஒன்றில் இவ்விதம் சீனு தெரிவித்துள்ளதாம்.

இலங்கை இந்தியர் பிரச்னை:

# இருநாட்டுப் பிரதமர்களும் பேச்சுவார்த்தை நடத்துவர்

## இம்மாதம் 20-ம் திகதி புதுடில்லியில் நடைபெறும்

கொழும்பு, வெள்ளி

இலங்கை-இந்தியர் பிரச்னை சம்பந்தமாக இந்தியப் பிரதமரும், இலங்கைப் பிரதமரும் இம்மாதம் 20-ம் திகதி பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என நம்பப்படுகிறது.

இப்பேச்சு வார்த்தைகளில் இலங்கை சார்பில் கலந்துகொள்ளுவதற்காக வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியூ டயஸ் இம்மாதம் 19-ம் திகதி இங்கிருந்து புதுடில்லிக்கு புறப்படுகிறர். இவருடன் பாதுகாப்பு அமைச்சின் உதவிக காரியதரிசி திரு. ஸ்ரான்லி ஜெயவீராவும், குடியேற்ற வெளியேற்ற கட்டுப்பாட்டதிகாரி டபிள்யு. ரி. ஜெயசிங்காவும் புதுடில்லி செல்வார். பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இம்மாதம் 20-ம் திகதி புதுடில்லி போய்ச் சேர்வார்.

இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக பிரதமர் பல எதிர்க்கட்சித் தலைவர்களுடன் இதுசம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தியதும், இந்திய வெளிவிவகார மந்திரியின் இலங்கை விஜயத்தை தொடர்ந்து அதிகாரிகள் கூட்டத்தில் பேச்சுவார்த்தை நடைபெற்றதும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

# 'முழுநேர ஊழியராக பணியாற்றுக'

## மேயரிடம் அங்கத்தவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

புரக்டர் தொழிலிருந்து ஓய்வு பெற்று முழுநேர ஊழியராகக் கடமையாற்றுமபடி நேற்று மாலை நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தில் மேயர் திரு. எஸ். லி. மகாதேவாவைப் பார்த்து திரு. ஏ. ஜி. ராஜசூரியர் வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

மாநகரசபையில் இடம் பெறும் ஊதாரித்தனமான செலவுகளைப் பற்றி கண்டித்து திரு. ராஜசூரியர் பேசுகையில் தான் மேற்படி வேண்டுகோளை விடுத்தார்.

மேயர் மாநகரசபையில் முழுநேர ஊழியராகக் கடமையாற்றினல்தான் மாநகரசபையில் இடம் பெறும் ஊழல்களையும், ஊதாரித்தனமான செலவுகளையும் கண்காணிக்கலாமென்று ராஜசூரியர் கூறியபோது, திரு. எஸ். நாகராசா அவரைப் பார்த்து, 'அப்படியானல் அவரை மேயராகவே இருந்து சீவியம் நடக்கச் சொல்கிறீர்கள் போலும்!' என்று கூறினர்.

இக்கட்டத்தில் சபையிலிருந்த அங்கத்தினரிடையே பலத்த சிரிப்பு இடம் பெற்றது.

தமிழ் பகுதிகளில்

# வர்த்தக ஆசிரியர் குறித்து மந்திரிக்கு எம்.பி. க்கள் கடிதம்

## பாரபட்ச நடவடிக்கையை நிறுத்துமாறு கோரிக்கை

சுழிபுரம், வெள்ளி

பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் வர்த்தக ஆசிரியர்களை நியமிப்பதுசம்பந்தமாக வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் எம்.பி.க்கள் தனித்தனியாகவும் கூட்டாகவும் கல்விமந்திரிக்கு கடிதம் எழுதியுள்ளனர். வர்த்தக ஆசிரியர்களை நியமிப்பதற்கு வேண்டிய முழுக் காரணங்களும் அக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

"சிங்களப் பிரதேசங்களில் அதிகமான வர்த்தக ஆசிரியர்கள் இருக்கின்றனர். ஆனல் தமிழ் பிரதேசங்களில் மிகவும் குறைவான பாடசாலைகளில் தான் வர்த்தகக் கல்வி போதிக்கப்படுகின்றது. 200-க்கு அதிகமான பாடசாலைகள், வர்த்தக ஆசிரியா நியமனம் கோரி விண்ணப்பித்துள்ளன. கனிஷ்ட பொதுத் தராதரப் பரீட்சையில் சித்தியடைந்த அதிகமானவர்கள் சிங்கள வர்த்தக ஆசிரியராக நியமனம் பெற்றிருக்கிறர்கள். ஆனல் தமிழ்பேசும் சமூகத்தைச் சேர்ந்த ஒருவராவது தற்காலிக வர்த்தக ஆசிரியராக நியமனம்பெறவில்லை. தமிழ்பேசும் மக்கள்மீது இவ்வித பாரபட்சம் காட்டப்படுவது நிறுத்தப்படவேண்டுமென்று கோருகின்றேம்." என்று அந்தக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்பேசும்மக்களுக்கு, கூடுதலாக வர்த்தக ஆசிரியர்கள் தேவைப்படுவதால் அடுத்தவருடம் ஜனவரியிலிருந்து குறைந்தது 100 வர்த்தக ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கையெடுக்குமாறும் அக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

## பத்திரிகை மசோதாவுக்கு எம். பி-யின் எதிர்ப்பு

நாத்தாண்டியா, வெள்ளி

'பத்திரிகைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளப் போவது உறுதியாகிவிட்டது. இதனை மக்கள் எதிர்க்காவிடில் ஒரு ஜனநாயக சகாப்தம் முடிவடைந்துவிடும்.'

இவ்வாறு நாத்தாண்டியா எம். பி. சேர். அல்பேர்ட் பீரிஸ் இங்கு நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டத்தில்பேசுகையில் குறிப்பிட்டார்.

"ஒரு ஜனநாயக நாட்டில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மக்களின் இன்னல்களைப் பிரதிபலிக்கச் செய்யவேண்டும். ஆட்சி பீடத்தில் நுழைந்துள்ள அதிகார வேட்கை கொண்டுள்ள மாக்ஸிச வாதிகள் மக்களின் அபிப்பிராயத்தை நசுக்கமுற்பட்டுள்ளனர். என்றும் அவர் கூறினர்.

பருத்தித்துறை. வெள்ளி

இந்திய செய்திப் படக்காட்சிகள் இம்மாதம் 11-ம் திகதி பருத்தித்துறைக் கடற்கரை மைதானத்திலும், நெல்லியடி மகாத்மா தியேட்டரிலும் காண்பிக்கப்படவிருக்கின்றன. 12ம் திகதி சாவகச்சேரியிலும், 13ம் திகதி இணுவில் கிராம சபை, கன்னுகம். சந்தை ஆகிய இடங்களிலும் 14ம் திகதி யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கிலும் செய்திப்படங்கள் காண்பிக்கப்படும்.

# புதிய அஸைஸ் கமிஷனர்கள்

கொழும்பு, வெள்ளி

திரு. வி. சிவசுப்பிரமணியம், திரு. ஒ. எல். டி. கிறெட்சர், திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி ஆகிய மூவரும் புதிய அஸைஸ் கமிஷனர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். அடுத்த திங்கட்கிழமை முதல் இவர்கள் தமது நியமனங்களை ஏற்றுக் கொள்வார்கள்.

இப பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோ. விலி மேலைவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964- ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.